Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 30 | 13-05-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 84

**விவசாயிகளே!**

**உங்கள் வீட்டுத் தோட்டத்தை வளமாக்க தேவையான**
தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித்தோடை, தோடை, சவுக்கு
**மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களை குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள்.**

ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி.
(3255)

## அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரம்

# சனாதிபதியின் நடவடிக்கையை எதிர்த்தால் அரசாங்கத்தை சனாதிபதி சந்திரிகா கலைப்பார்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை

**அபிவிருத்தி லொத்தர் சபையைப் பொறுப்பேற்றதற்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முற்படுமானால் சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சனாதிபதி அபிவிருத்தி லொத்தர் சபையைப் பொறுப்பேற்கும் தீர்மானத்திற்கு பொதுசன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுச் சபை ஏகமனதாக ஆதரவு தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் இது தொடர்பாக சனாதிபதி எடுக்கவிருக்கும் எந்தவொரு தீர்மானத்திற்கும் அங்கீகாரம் வழங்குவதற்கு அச்சபை தயாராகி வருகின்றது.

அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்றதற்கான தீர்மானம் அரசியல் தீர்மானம் அல்ல. ஆனால் அது தேசிய முக்கியத்துவத்தின்

(08ஆம் பக்கம் பார்க்க)



### சமாதான நடவடிக்கைகள் குறித்து

## சந்திரிகா, ரணிலுடன் கிறிஸ்ரினா றொக்கா பேச்சு

சிறிலங்கா வந்துள்ள அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா நேற்று மாலை சனாதிபதியையும், பிரதமரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து விடுதலைப்புலிகள் தற்காலிகமாக விலகிக் கொள்வதாக அறிவித்ததையடுத்து சமாதான முன்னெடுப்புக்களின் முக்கியத்துவம் குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், கிறிஸ்ரினா றொக்காவும் கலந்துரையாடிய

(08ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புடனான சந்திப்பில் ஆனந்தசங்கரி கலந்துகொள்ளார்

இன்று கிளிநொச்சியில் கூட்டமைப்பினருடன் நடைபெறும் சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி கலந்துகொள்ளமாட்டார் எனத் தெரியவருகிறது.

இன்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது தெரிந்ததே. இதில் கூட்டமைப்பைச் சேர்ந்த ஆனந்தசங்கரி கலந்துகொள்ள மாட்டார் எனத் தெரியவருகின்றது.

## சனாதிபதிக்கு எதிராக குற்றவியல்பிரேரணை; ஆராய ஐ.தே.முன்னணி குழு அமைப்பு!

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதிக்கு எதிராக குற்றவியல்பிரேரணை கொண்டுவர ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு முனைந்துவருகின்றது. தற்போது தோன்றியுள்ள அரசியல் நெருக்கடிக்கு மக்களை அணிதிரட்டி எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஆளும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அமைச்சர் மிலிந்த மொறகொட வசமிருந்த அபிவிருத்தி லொத்தர் சபையை பிரதமரின் ஆலோசனையின்றி சனாதிபதிபெற்றுக்கொண்டதை அடுத்து பல அரசியல் நெருக்கடிகள் தோன்றியுள்ளன.

அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காக அமைச்சர்களான கே.என் சொக்சி, ஜீ.எல். பீரிஸ், திலக் மாரப்பன ஆகியோரைக்கொண்ட குழுவொன்றை அமைச்சரவை நியமித்துள்ளது.

இந்த நிலையில் சனாதிபதியின் செயலைக்கண்டித்து இன்று நாடுதழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஐக்கிய தேசியமுன்

(08ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்புத்துறைமுகப் பாதுகாப்பு

## கடும் மழைக்கு மத்தியிலும் ஒத்திகை நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்புத்துறைமுகப் பாதுகாப்பிற்குப் பொறுப்பான கடற்படையினர் நேற்று முன்தினம் ஒத்திகை நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டனர்.

கடும் மழைக்கு மத்தியிலும் இந்த ஒத்திகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனால் கொழும்புத் துறைமுகச் சுற்றுவட்டாரப் பகுதியில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு போக்குவரத்துக்களும் தடைப்பட்டிருந்தன.

## நாவலப்பிட்டியில் பொ.ஐ.மு அலுவலகம் மீது தாக்குதல்

### கட்சி மோதலில் ஐவர் படுகாயம்

நாவலப்பிட்டியில் உள்ள பொதுசன ஐக்கிய முன்னணியின் அலுவலகம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கட்சி மோதலில் ஐந்துபேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஐக்கியதேசியக் கட்சி மற்றும் பொதுசன ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறுகாரணமாகவே இந்த மோதல் ஏற்பட்டிருந்தது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### கப்பல் அடித்து செல்லப்பட்டது

கொழும்புத்துறைமுகத்துக்கப்பால் நங்கூரமிடப்பட்டிருந்த மாலைதீவு சரக்குக் கப்பல் ஒன்று காலநிலை சீர்கேடு காரணமாக கடலில் அடித்துச்செல்லப்பட்டுள்ளது.

இந்தக்கப்பல் மொரட்டுவ கடற்பகுதியில் கரையொதுங்கியுள்ளது. திருத்தவேலைக்காக இக்கப்பல் கொழும்புத்துறைமுகத்துக்கப்பால் நிறுத்தப்பட்டிருந்தது.

## தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிமனை மூதூரில் திறப்பு

திருகோணமலை மூதூர் கட்டைபறிச்சானில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிமனை நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டுள் ளது.

கிராமசேவை உத்தியோகத்தர் செல்வரெட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் இப்பணிமனையைத் திறந்துவைத்தார். அண்மையில் மூதூரில் இடம் பெற்ற அனர்த்தங்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு, அம்பாறை, திருமலையில் சூறாவளியுடன் கடும் மழை

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று இரவு கடும் சூறாவளிக் காற்றுடன் கூடியமழை கொட்டி உள்ளது.

இந்த திடீர் சூறாவளிக்காற்றுடன் கூடிய மழையினால் மின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு மாவட்டங்கள் இருளில் மூழ்கி இருந்தன.

வீதி எங்கும் பெருமரங்கள் முறிந்து வீழ்ந்து வீதிப்போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன.

இதேவேளை திருகோணமலையிலும் சூறாவளிக் காற்று வீசி உள்ளதுடன் கொழும்பிலும் நேற்று நள்ளிரவு வரை கடும் மழை பொழிந்துகொண்டிருந்தது.

இந்தத் திடீர் அனர்த்தத்தினால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான விபரம் இச்செய்தி எழுதப்படும்வரை கிடைக்கப்பெறவில்லை.

## யாழ். மாதகல் கடற்பரப்பில் மீனவர் மீது கடற்படைதாக்கு

### இரு மீனவர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாதகல் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

மாதகல் பகுதியை சேர்ந்த சந்தியாப்பிள்ளை பிரான்சிஸ், கந்தசாமி

(08ஆம் பக்கம் பார்க்க)



திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் திலக் பணிமனையைத் திறந்துவைக்கிறார்.

# கரைதுறைப்பற்று பி.செ. பிரிவு உதைபந்தாட்டத்தில் வெற்றி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச செயலர்பிரிவுகளுக் கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், கரைதுறைப் பற்றுப்பிரதேச செயலர்பிரிவு இறுதிப்போட்டியில் வெற்றிபெற்றது.

கடந்த வியாழனன்று முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத் தில் நடைபெற்ற இவ்விறுதிப்போட்டியில் கரைதுறைப்பற்று பிர தேச செய்லர்பிரிவு 4 கோல்களையும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவு 3கோல்களையும்போட்டன.இப்போட்டியினைப் பெருந் தொகையான பார்வையாளர்கள் உற்சாகத்துடன் பார்வையிட்டனர்.

## பெண் தற்கொலை

கணவன் மனைவிக்கிடையே குடும்பத்தகராறு காரணமாக கண வன் மனைவியை அடித்தமையி னால் மனைவி அலரிவிதை யினை அருந்தி மரணமடைந்துள் ளார். கடந்த சனிக்கிழமை நடை பெற்றசம்பவத்தில்இவரைநெடுங் கேணிவைத்தியசாலைக்குகொண்டு சென்றவேளை அவர்மரணமடைந் துள்ளார். இறந்தவர் பெரிய இத் திமடுவைச் சேர்ந்த ஆனந்தன் செல்வராணி (வயது- 21) என்ற மூன்றுபிள்ளைகளின் தாயாவார்.

# முல்லைத்தீவில் வெள்ளியன்று குருத்துவ திருநிலைப்படுத்தல் விழா

முல்லைத்தீவு தூய பேதுரு ஆலயத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் குருத்துவ திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கான போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட் டுள்ளது. செம்மலையிலிருந்து மாலை 3.00 மணிக்கும் மாலை 4.00 மணிக்குப் பேருந்துகள் புறப்பட்டு முல்லைத்தீவைச் சென் றடையும். முள்ளியவளையிலிருந்தும் மாலை 3.00மணிக்கும், மாலை 4.00 மணிக்கும் பேருந்துகள் புறப்பட்டு முல்லைத்தீவிற்கு வருகைதரும். மாத்தளனிலிருந்து மாலை 4.00 மணிக்கு பேருந்து புறப்பட்டு முல்லைத்தீவை வந்தடையும். புதுக்குடியிருப்பிலிருந்து முகமாலை பேருந்தில் மக்கள் முல்லைத்தீவிற்கு வருகைதரும் பட்சத்தில் திரும்ப வும் முல்லைத்தீவிலிருந்து புதுக்குடியிருப்பிற்குச் செல்வதற்கு வாகன ஒழுங்குகள் தமிழீழ போக்குவரத்துக்கழகம் ஊடாக ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது என்றும் இவ்விழாவில் அனை வரையும் கலந்து கொள்ளுமாறு பங்குக்குருவும், பங்கு மக்களும் கேட்டுக் கொள் கின்றனர். (20)

# 31ஆம் நாள் கவலையின் நிழல்கள்



உதிரும் பூவாய்
2003-04-12



**சூசைபெனடிற் நிர்மலா**
மலரும் பூவாய் 1968-01-23

**சூசைபெனடிற் கொலின்ஸ் பெர்னாண்டோ**
மலரும் பூவாய் 1991-08-18

வெளிநாடு செல்லவென்று இந்தியா கூட்டிச் சென்றாயம்மா. வேளாங்கண்ணித் தாயிடம் எங்கள் இருவரையும் காணிக்கை செய்துவிட்டு திரும்பிவரும் போது நீங்கள் இருவரும் இறைவனடி சேர்ந்தீங்களோ? அம்மா, அண்ணா உங்கள் பிரிவால் தவிக்கின்றோம்.

இவர்களின் பிரிவால் துயருறும்

பாசமுள்ள
**சூ. வனைஜா.**
(மகள்)

தகவல்:
**S. கொன்சன்ரைன்.**
வடமராட்சி கிழக்கு.
வெற்றிலைக்கேணி. (3198)

# வாழ்த்துகின்றோம்

வைகாசி 13 பற்றிமா பதியில் மூன்று சிறுவர்களுக்கு பரிசுத்த தேவ தாய் காட்சி கொடுத்த நாளை கிளி/புனித பற்றிமா வித்தியாலயத்தைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் தமது பாடசாலைத் தினமாகக் கொண்டாடுகிறார்கள் . முழுமனித விடுதலையை நோக்கித் தமது கரத்தில் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை

**"இறைவனே எங்கள் ஒளி"**

என்ற விருது வாழ்கை இலக்காக வைத்து பணி செய்யும் ஒவ் வொருவரையும் நெஞ்சார வாழ்த்துகின்றோம். புனித பற்றிமா அன்னையின் ஆசியும் அருளும் நிறைவாகக் கிடைப்பதாக.

*தவா் செய்யுங்கள்.*
*செபம் செய்யுங்கள்.*
*செபமாலை சொல்லுங்கள்.*

**பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழையமாணவரும்.**
**கிளி புனித பற்றிமா றோ.க. வித்தியாலயம்.**
(சி-787)

**90 ஆம் நாள்** **9 ஆம் ஆண்டு**

# நீங்காத நினைவலைகள்



01.10.1943 - மண்ணில் - 12.09.1975
13.02.2003 - விண்ணில் - 01.03.1994



**தனிநாயகம் அடிகளார் வழித்தோன்றல்**
## கந்தையா மரியதாஸ்
**நெடுந்தீவு**
**(அரச அபி. நிர்மாண கூட்டுத்தாபன முன். அலுவலர்)**

**விசேட வேவுப்புலி**
## கப்டன் கரிகாலன்
**(மரியதாஸ் அன்ரனி சசிக்குமார்)**

*அன்பு எம் அப்பா!*
*அருமை உடன்பிறப்பே!*
*பெருந்துணை நீங்களென்று*
*பெருமை கொண்டிருக்க*
*வருந்தி வருந்தி அழுங்களென்றும்*
*வழியை வழியைப் பாருங்களென்றும்*
*எமைவிட்டுப் போனீரோ!...*
*உடம்பனைத்தும் வாயாக அழுகின்றோம்.*

*ஐயய்யோ! உறுதுயரம் போய்விடுமா?*
*இருந்தாலும்... இருந்தாலும்....*
*இந்தப் பனித்துளி உலகில்*
*ஒவ்வொன்றுதானே நீங்களும்*
*ஆம், அந்த பனித்துளி ஆயுளில்*
*வீரமறவனே! நீ*
*களத்தில் காவியமானாய்*
*உளத்தில் ஓவியமானாய்*

*சரித்திரப் பூ*
*அதனிடம் கொடுத்தவனே!...*
*நீயும் ஏன் ?*
*மறுமலர்களை மறந்து சென்றாய்*
*வரவை வேண்டுகின்றோம் மறுபடியும்*
*கொடியும் மலருமாகவே*
*அடுத்து வரும் பிறப்பென்ன*
*எப்பிறப்பிலும் எம்மோடு நீ இருந்திடுங்கள்.*

**சொந்த முகவரி:**
**40, ஜெயந்தி நகர்,**
**கிளிநொச்சி.**

எமது இல்லத்தில் 13.05.2003 இன்று நடைபெறும் நினைவு நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(3257)

# பிரான்ஸ் இனத்தவர் மீதான தாக்குதல் அதிகரிப்பு

# ஐவரிக்கோஸ்டில் பெருமளவானோர் வெளியேற்றம்!

**ஆபிரிக்க நாடான ஐவரிக்கோஸ்டில் பூர்வீகக் குடியேற்றக்காரர்களான பிரான்ஸ் இனத்தவர்கள் அச்சம் காரணமாக வெளியேறி வருகின்றனர். பிரான்ஸ் அரசின் தலையீட்டினால் அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்ட நிலையில் இவ்வினத்தவர்கள் மீதான தாக்குதல்கள் தீவிரமடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.**

ஐவரிக்கோஸ்டில் செயற்பட்டுவரும் தீவிரவாத இயக்கத்தினருக்கும் அந்நாட்டு இராணுவத்தினருக்கும் இடையில் கடந்த ஒரு வருடமாகச் சண்டை நடைபெற்று வந்த நிலையில் கடந்த காலங்களில் அந்நாட்டை ஆண்ட பிரான்ஸ் அரசு இதில் தலையிட்டு சமரசப் பேச்சுவார்த்தை நடத்தியது.

இதன் மூலம் தீவிரவாத அமைப்பினருக்கும் அரசில் உயர் பதவி வழங்கப்பட்டதால் ஐவரிக்கோஸ்ட் மக்களில் பலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு பூர்வீகமாக குடியிருந்து வரும் பிரஞ்சு இனத்தவரை குறிவைத்துத் தாக்கி வருகின்றனர்.

இதில் கடந்த 30 வருடங்களாக ஐவரிக்கோஸ்டில் வசித்துவரும் ஒருவரது உணவுவிடுதி அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

இதனால் வன்முறைக்கு அஞ்சி ஏராளமானவர்கள் தமது உடமைகளை விட்டுவிட்டு, தாயகத்திற்குத் திரும்பியுள்ளனர்.

## சதாமின் 'பாத்' கட்சிக்கு அமெரிக்க இராணுவம் தடை!

(பாக்தாத்)

ஈராக் சனாதிபதி சதாம்ஹுசைனின் பாத் கட்சி கலைக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் அந்தக் கட்சியின் ஆதரவாளர்களை கட்சியின் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டாம் என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும் கட்சியின் முக்கிய நபர்களைத் தங்களிடம் சரணடையுமாறும் அமெரிக்கா கேட்டுள்ளது.

அந்தக் கட்சியோடு தொடர்புடைய ஆவணங்கள் வைத்திருப்பது சட்டவிரோதமானது என்றும் அவ்வாறானவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.



வரட்சியால் பாதிக்கப்பட்ட டாக்கா வாசிகளுக்கு குடிநீரை விநியோகம் செய்யும் பங்களாதேஷ் படையினர்.

## இஸ்ரேலின் மனிதாபிமான நடவடிக்கை; 180 பலஸ்தீனர்கள் விரைவில் விடுவிப்பு!

(டெல்அவிவ்)

இஸ்ரேலியப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 180 பலஸ்தீனர்களை விடுதலை செய்ய இஸ்ரேல் அரசு தீர்மானித்துள்ளது.

அத்தோடு 25,000 பலஸ்தீனர்களுக்கு மீண்டும் இஸ்ரேலில் தொழில் புரிவதற்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.


ஜெருசலேமிற்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவலின் வேண்டுகோளிற்கு இணங்கவே இந்த நடவடிக்கையினை இஸ்ரேல் அரசு எடுத்துள்ளது.

எவ்வாறாயினும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து இஸ்ரேல் பிரதமர் ஏரியல் சரோன் கொலின் பவலிடம் எந்தவிதமான உறுதிமொழியையும் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மனிதநேய அடிப்படையிலேயே பலஸ்தீனர்கள் விடுதலை செய்யப்படுவதாக இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.



பெத்லகேம் பஸ் விபத்தில் பலியானவர்களின் உறவினர்கள் தமது இறந்த உறவினரை அடையாளம் காண சவப்பெட்டிகளைச் சோதனையிடுகின்றனர்.



ஈராக்கிய மதத் தலைவர் முகமத் பக்கிர் – அல் – அக்கிம் பயணம் செய்யும் வாகனத்தைச் சூழ்ந்து நிற்கும் ஈராக்கியர்.

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பிரிட்டனில் அறிமுகம்

(லண்டன்)

பிரிட்டன் அரசாங்கம் புதிய பயங்கரவாதத் தடுப்புச்சட்ட திடடங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்பிரகாரம் பொலிசார் குற்றச்சாட்டுக்கள் இல்லாத நிலையில் சந்தேக நபர்களை ஏழு முதல் பதின்நான்கு நாட்கள் வரை தடுத்து வைக்க முடியும். இது முன்னைய காலப் பகுதியைவிட இரண்டு மடங்கானதாகும்.

உள்துறை அமைச்சர் இந்த நடவடிக்கைகள் சர்ச்சைக்குரியவைதான் என்பதை ஏற்றுக் கொண்டார். ஆனால் சர்வதேச ரீதியில் எல்லைகளைத்ள தாண்டிப் பரவியிருக்கும் வலை அமைப்புக்களைச் சேர்ந்தோரை விசாரிக்க வேண்டும். அதற்கு இது அவசியமானது என்றார். கடவுச்சீட்டுக்கள், சாரதி அனுமதிப் பத்திரங்கள் என்பன தொடர்பான சட்டவிதிகளும் கடுமையாக்கப்பட்டுள்ளன.

## இப்போது வாய்ப்பில்லை!

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே இன்னும் சுமுகமான உறவு ஏற்படாமையினால், இஸ்லாமாபாத்திற்கு இந்திய நாடாளுமன்றக் குழுவை அனுப்ப இப்போதைக்கு வாய்ப்பில்லை என்று மக்களவைத் தலைவர் மனோகர் ஷோசி கூறியுள்ளார்.

எல்லை கடந்த பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

## இந்தியா- ரஷ்யா பொருளாதார மேம்பாட்டிற்கு கூட்டு நடவடிக்கை

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே பொருளாதாரம் மற்றும் உயர் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்த, இரு பணிக்குழுக்களை அமைக்க இரு நாடுகளும் திட்டமிட்டுள்ளன.

வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா அடுத்த வாரம் மொஸ்கோவிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போது இது குறித்து முடிவு மேற்கொள்ளப்படும்.

மொஸ்கோவில் ஜஸ்வந்த் சின்ஹா, ரஷ்ய நிதியமைச்சருடன் பேச்சுக்கள் நடத்தும் போது முதலீட்டுக்கான பணிக்குழு அமைப்பது பற்றி விவாதிக்கப்படும்.

பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்ப ஒத்துழைப்புக்கானது மற்றைய பணிக்குழு ஆகும்.



சார்ஸ் வைரஸ் பரவாதிருக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக மணிலா நகரில் குப்பைகளை அகற்றும் பிலிப்பைன்ஸ் நகரசுத்தித் தொழிலாளர்கள்

## இந்திய 'அஸ்த்ரா' ஏவுகணை 3ஆவது முறையாகப் பரீட்சிப்பு

(புதுடில்லி)

வானில் இருந்து வானிலுள்ள இலக்கைத் தாக்கும் அஸ்த்ரா ஏவுகணை ஒரிஸாவிலிருந்து சந்திப்பூர் ஒருங்கிணைந்த சோதனைத்தளத்திலிருந்து மூன்றாவது முறையாக நேற்று பரிசோதிக்கப்பட்டது.

25 கி.மீற்றர் முதல் 40கி.மீற்றர் வரையிலான தொலைவிலுள்ள இலக்குகளை அஸ்த்ரா ஏவுகணை துல்லியமாகத் தாக்கக்கூடியது.

பாதுகாப்பு ஆய்வு மேம்பாட்டு நிறுவனத்தால் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட இவ் ஏவுகணை இலகு ரக போர் விமானத்தில் பொருத்தப்படத்தக்கதாகும். நாட்டிலுள்ள பெரு நகரங்களில் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான மூன்று அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக அஸ்ரா ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## போட்டியின்றி தெரிவு

தமிழக பா.ஜ. கட்சியின் தலைவராக அக்கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் சி.பி. ராத கிருஸ்ணன் போட்டியின்றித் தெரிவாகியுள்ளார்.

தற்போதைய தலைவர் எஸ். பி. கிருபாநிதியின் பதவிக் காலம் நேற்றுடன் முடிவடைந்தமையினால், புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

# உளநலம் பாதித்த பெண்களை காக்கும் 'வெற்றிமனை'

வட தமிழீழத்தில் போரினாலும் போர் அனர்த்தங்களினாலும் மனநிலை பாதிக்கப் பட்ட பெண்களை இனங்கண்டு அவர்களுக் கென பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு

2002ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆறு பணி யாளர்கள் தான் இங்கு பணிபுரிந்து வந்தனர். தற்போது நேர ஒழுங்குகளை மாற்றி காலை, மாலை என்ற ரீதியில் பணியில் ஈடுபடுத்தி

வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, தோட்டச் செய்கை என்று இங்கிருந்தே செய்து வருகின்றனர்.

இவ்வாறு செய்வதனால் அவர்களின்


எல்லாம் மனநோயால் பாதிப்புற போரின் பாதிப்பும், ஆணாதிக்கத்தின் பாதிப்பும் தான் காரணம். அதாவது இராணுவத்தினரின் பாலியல் வல்லுறவுக் கொடுமைகள், குண்டு

நிறுவனத்தின் நிதியுதவியுடன் உருவாக்கம் பெற்ற "வெற்றிமனை" என்ற மகளிர் உள வளத்துணை நிலையம் செயற்பட்டு வரு கிறது. இதன் இணைப்பாளர் செல்வி பால சிங்கம் அகிலேஸ்வரி அவர்களுடனான நேர்காணல்.

இந்நிறுவனம் 1991ஆம் ஆண்டு யாழ்ப் பாணம் உடுவில் பகுதியில் பூரணி என்ற பெயருடன் குறிப்பிட்ட ஒரு சிலருடன் (பத்திற் குட்பட்ட) ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இடம் பெயர்ந்து றெட்பானா விசுவமடுப் பகுதியில் இருந்து 1998ஆம் ஆண்டு கிளிநொச்சி அக்கரையானில் நிறுவப்பட்டுள்ளது. தற்போது

வருகின்றோம். இங்கு பணிபுரிகின்ற பணி யாளர் எதையும் தாங்கி நிற்க கூடிய, சக்தி யுள்ளவர்களாகவே உள்ளனர். ஏனென் றால் இங்கு உள்ள உளவியல் தாக்கத் திற்குள் ளானவர்கள் பணியாளர்களை அவ தூறான வார்த்தைகளைப் பிரயோகித்து தம்மை மறந்து பேசுவார்கள். அப்படியான சம்பவங் களை தமது மனதில் தாங்கக் கூடிய பணி யாளர்கள் தான் இங்கு பணிபுரிகின்றார்கள். அத்தோடு எந்த நிறுவனத்திலும் இல்லாத இன்னல் களைத் தாங்கியவாறு தான் பணிபுரிகின்றனர். ஒருவருக்கு உளவியல் சம்பந்தமான நோய் அதிகரித்தால் அவரைக் கட்டுப்படுத்த சிலவேளை, 10 பேர் என்றாலும்





மனநிலைப் பாதிப்பிற்கு நேரம் வராது என்றே கூற வேண்டும். இவ் உளவியல் தாக்கத் தினை மருந்துகள் மூலம் மாற்றிக் கொள்வது என்பது கடினம் என்றுதான் கூற வேண்டும்.

இங்கு பராமரிக்கப்பட்டு 15 பேர் ஓரளவு குணமடைந்துள்ளனர். குணமடைந்த ஆறு பேர் வீடுகளுக்குச் சென்றுள்ளனர். தற்போது இரண்டு பேர் மீண்டும் இங்கு வந்துள்ளனர். காரணம். சமூகத்தில் அயலவர்கள் மதிக் காமை. உளவியல் பாதிப்பிற்கு உட்பட்டவர்

வீச்சுத் தாக்கங்கள். சித்திரவதைகள், மனைவி முன்னால் கணவனையும் தாய்முன் பிள்ளை யையும் சித்திரவதை செய்தமை அடுத்து ஆண்களால் ஏமாற்றப்பட்ட நிலையில் உள்ள வர்கள். இவ்வாறான தாக்கத்திற்கு உள்ளான தால் இடையில் பாதிக்கப்பட்டவர்கள் தான் இங்குள்ளனர்.

இங்குள்ளவர்களின் பிள்ளைகள் சிலர் செந்தளிர் சிறுவர் இல்லம் என்ற இல்லத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

64 பேருடன் அதாவது வயது ரீதியாக என்றால் 13 வயதுச் சிறுமி உட்பட 20 வய திக்குட் பட்ட 20பேரும் 50 வயதிற்கு மேற் பட்டவர்கள் 15 பேரும் தற்போதுள்ளனர்.

☐ இந்நிறுவனத்திற்கான நிதி எங்கிருந்து கிடைக்கின்றது?

இதற்கான நிதி பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தில் இருந்து தான் கிடைக்கின்றது. அந்த நிதி மூலம் தான் இந்நிறுவனத்தில் பணியாளர் ஊதியம் பயனாளிகளின் பராமரிப்பு எல்லாவற்றையும் செய்து வருகின்றது.

☐ எவ்வாறான பாதிப்புக்குட்பட்டவர்களை

தேவை என்று தான் கூறவேண்டும். இவர் களை அன்பால் தான் கட்டுப்படுத்த முடியும். ஒரு மனநோயா ளியை நாங்கள் அடித்துத் துன்புறுத்து வோமாயிருந்தால் ஏனையோருக் கும் அது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் இங்கு அவ்வாறு இல்லை மிகவும் அன்பாகவும் நல்ல அரவணைப்புடனும் தான் பராமரித்து வருகின்றோம்.

☐ முன்னர் கூறியது போல் ஒரு 13 வயதுச் சிறுமியை இங்கு வைத்து வாழ்நாள் முழுவதும் பராமரிக்க முடியுமா?

எந்த ஒரு உளவியல் பாதிப்பிற்கு உட் பட்ட ஒருவரையும் தாம் இடை நடுவில் விடுவதில்லை. இந்தச் சிறுமிக்கு இந்நோய்





பராமரித்து வருகின்றீர்கள்?

நாங்கள் மனநலன் குன்றிய பெண்களை சமூகத்தில் இருந்து இனம்கண்டு அவர்களை பராமரிக்கிறோம் இப்படியானவர்கள் வீட்டில் இருந்து உறவினர்களால் கொண்டு வந்து இங்கு விடப்பட்டவர்கள் என்பது மிகவும் குறைவு. வீதிகளில் அனாதரவான நிலையில் தள்ளப்பட்ட மனநலன் குன்றிய பெண்களை இந்நிறுவனத்தில் வைத்துப் பராமரித்து வருகின்றோம்.

☐ மனநலன் குன்றியவர்களைப் பராமரித்து வரும் பணியாளர்கள் பற்றி ஏதாவது கூற முடியுமா?

குணமடையவில்லை என்றால் வாழ்நாள் முழுவதும் வைத்துப் பராமரிக்க முடியும். அவ்வாறு தான் இதுவரையும் பராமரித்து வருகின்றோம்.

☐ இவர்களுக்கு ஏதாவது தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கின்றீர்களா?

மனநலன் பாதிப்பிலிருந்து குணமடைந்த வர்களை பெண்கள் புனர்வாழ்வுக்கழகத்தின் கீழ் இயங்கும் தொழிற் கூடங்களில் அவர்கள் விரும்பும் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். உதாரணமாக தையல்பயிற்சி. இதைவிட இங்குள்ளவர்களில் பெரும்பாலானோர் ஆடு

என்று புறம் கூறுவது.

இவ்வாறு நோய்வாய்ப்பட்டு குணமடைந்து வீட்டிற்குச் சென்றால் சமூகம் இவர்களின் மனநிலை பாதிக்கக் கூடிய செய்களைச் செய்வது, அவர்களை ஒரு வித்தியாசமான பார்வையில் பார்ப்பது என்பனவற்றைக் கூற லாம்.

☐ வன்னிப் பகுதியில் உள்ள உளவியல் தாக்கத்திற்கு உட்பட்டவர்களை மட்டும்தான் பராமரித்து வருகின்றீர்களா?

சகல மாவட்டங்களிலிருந்தும் உளவியல்

**சு. பாஸ்கரன்**

தாக்கத்திற்குட்பட்ட பெண்களை இங்கு அனுமதிக்கின்றோம். தற்பொழுது மட்டக் களப்பிலிருந்து கூட இரண்டு பேர் இங்கு வந்துள்ளார்கள். அதைவிடக் கொழும்பில் இருந்தும் கூட இங்கு வந்துள்ளனர். இடவேறு பாடு இன்றியே இங்கு உள்வாங்குகின்றோம்.

☐ இங்குள்ள மனநோயாளிகள் எவ்வாறு இப்பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்?

பிறப்பிலிருந்து மனநோயாளர் என்றால், அவர்களிற்கு வேறு இல்லம் இருக்கின்றது. இங்கு அப்படியில்லை. இங்குள்ளவர்கள்

☐ யாராவது உங்களின் நிறுவனத்திற்கு உதவிகள் ஏதாவது செய்ய விரும்பின் அதனை எவ்வாறு செய்ய முடியும்?

இவ்வாறு உதவி செய்ய விரும்பினால் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறு வனத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ உதவிகளைச் செய்யலாம். அதைவிட எமது வங்கிக் கணக்கு உள்ளது. அதற்கும் வைப் புச் செய்து கொள்ளலாம். 19407 என்ற மக்கள் வங்கிக் கணக்கிற்கோ அல்லது 1305 என்ற தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கிற்கோ வைப்புச் செய்து கொள்ளலாம்.

☐ உங்களுடைய இன்நிறுவனம் பதிவு செய் யப்பட்ட ஒரு நிறுவனமா?

1990 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும் சட்டத்தின் கீழ் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் வலிந்துதவு சமூக சேவைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புப் பதிவாளர் இளையதம்பி. பிரதேச செயலர் ஐயாத்துரை அவர்களால் கிளி.அக்கரையானில் அமைந் துள்ள வெற்றிமனை மகளிர் உளவளத் துணை நிலையம் வலிந்துதவு திணைக் களத்தின் கீழ் 1998 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது

# செய்நிரலாக்கல் மொழிகள்

கடந்தவாரம் செய்நிரல்களை எழுதப்பயன்படும் மூன்று வகையான மொழிகளைப்பற்றி பார்த்தோம்.

**1. இயந்திர மொழி (Mechine Language)**
இது 1,0 ஆகிய இரு இலக்கங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்ட மொழியாகும் என்பதனையும் இதனை கீழ் மட்ட மொழி **(Law Level Language)** என அழைப்பர் எனவும் பார்த்தோம். இது முதலாம்தலை முறைமொழி **(1st generation Language)** எனவும் அழைக்கப்படுகின்றது.

Machine Code

```
00010100101101010101010101
11101101010101010101011100
00101001010100101111010111
10010100101101010101010101
01101001001100101111010111
00010001010111010101010001
10101001010100101011010111
00010100101101010101010101
```

**2. ஒருங்கு சேர்ப்பு மொழி (Assembly Language)**
இது எழுத்துக்கள் எண்கள் என்பவற்றைக் கொண்டு எழுதப்படுவது என்றும் இயந்திர மொழிக்கு மிகவும் நெருங்கியது எனவும் பார்த்தோம். இதுவும் ஒரு கீழ்ப்பட்ட மொழியாகும். இதனை இரண்டாம் தலைமுறை மொழி **(2nd Generation Language)** என அழைப்பர்.

Assembly Code

```
;CLEAR SCREEN USING BIOS
CLR: MOV AX,0600H        ;SCROLL SCREEN
     MOV BH,30           ;COLOUR
     MOV CX,0000         ;FROM
     MOV DX,184FH        ;TO 24,79
     INT 10H             ;CALL BIOS;
;INPUTTING OF A STRING
KEY: MOV AH,0AH          ;INPUT REQUEST
     LEA DX,BUFFER       ;POINT TO BUFFER WHERE STRING STORED
     INT 21H             ;CALL DOS
     RET                 ;RETURN FROM SUBROUTINE TO MAIN PROGRAM;
; DISPLAY STRING TO SCREEN
SCR: MOV AH,09           ;DISPLAY REQUEST
     LEA DX,STRING       ;POINT TO STRING
     INT 21H             ;CALL DOS
     RET                 ;RETURN FROM THIS SUBROUTINE;
```

**3. உயர்மட்ட மொழிகள் (High level Languages)**
இவற்றை மனிதன் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும் என்பதுடன் இவற்றில்பல மொழிகளையும் பார்த்தோம். இவை மூன்றாம் தலைமுறை மொழிகள் **(3rd generation Languages)** என அழைக்கப்படுகின்றன. இவை ஆங்கில மொழிச் சொற்களைக்கொண்டு குறியீட்டு முறையில் எழுதப்படுபவை.

இவற்றிலேயே **C,C++** என்பன மிகவும் சக்தி வாய்ந்த மொழிகளாகும் இவற்றின் மூலம் கணினிக்கு வழங்க வேண்டிய கட்டளைகளை முன்னர் குறிப்பிட்ட உயர் நிலைமொழிகளை விட இலகுவாகவும், தெளிவாகவும் வழங்க முடியும்.

**Java** என்பது இணையமானது. பிரபல்யமாகத் தொடங்கிய 1990களில் உருவாக்கப்பட்டது. இது சன்மைக் குரோசிஸ்ரம் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. இணையத்தளங்கள் அதனோடு இணைந்த செயற்பாடுகளுக்கு மிகவும் உகந்தது. இதனை எதிர்கால மொழி என்றும் அழைப்பர்

BASIC code

```
IF D& > 15 THEN
   DO WHILE D& > 1
      D& = D& - 1
   LOOP
END IF
```


இதேவேளை மைக்கிறோ சொவ்ற் நிறுவனத்தால் இதே போன்று உருவாக்கப்பட்டது **Activex** எனும் மொழியாகும்.

இப்பொழுது நாங்கள் இவற்றிலும் இலகுவான நான்காம் தலைமுறை மொழிகள் பற்றிப் பார்ப்போம்.

## நான்காம் தலைமுறை மொழிகள் (Fourth-Generation Languages)

இந்த மொழிகள் ஆங்கில மொழியை ஒத்தவையாகும். அத்துடன் மூன்றாவது தலைமுறை மொழிகளில் பல கட்டளைகளைக்கொண்ட தொகுப்புக்கள் மூலம் கணினி செய்வதை இம்மொழியில் ஒரேயொரு வரிக்கட்டளை மூலம் செய்துவிட முடியும். அத்துடன் இவ்வாறான மொழிகளில் கட்டளைகளைக் கணினிகளுக்கு சொற்களாக வழங்காமல் சொடுக்கி **(Mouse)** மூலம் திரைகளில் காணப்படும் சில விசைகளை அழுத்தி வழங்கலாம். அத்துடன் பல கட்டளைகளை தனித்துசில விசைகளை ஒருங்கே அழுத்துவதன் மூலம் வழங்கலாம். இவ்வாறான மொழிக்கு உதாரணமாக விசுவல் பேசிக் **(Visual Basic)** உள்ளது.

**விசுவல் பேசிக் (Visual Basic)**



இது **BASIC** மொழியிலிருந்து மைக்குரோசொவ்ற் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட ஒரு மொழியாகும். இங்கு திரையில் காணப்படும் கருவிப்பட்டைகளை **(Tool bars)** இயக்குவதன் மூலம் கணினிகளுக்கு கட்டளைகள் வழங்கப்படுகிறன. இங்குள்ள கருவிப்பட்டைகளில் பெரும்பாலு கட்டளைகள் வெளிப்படையாகக் காணப்படுகின்றன. பல உப கட்டளைகளாக மறைந்தும் காணப்படுகின்றன. எனவே இங்கு மொழிப்பிரச்சினை பயன்படுத்துபவர்களுக்கு குறைகிறது. குறிப்பிட்ட சில குறியீடுகள் ஆங்கிலச்சொற்கள் சுட்டிக்காட்டும் கட்டளைகள் என்ன? என்பதைத் தெரிந்துகொள்வதன் மூலம் கணினிகளை சுலபமாக இயக்கலாம்.

## ஐந்தாம் தலைமுறை மொழி (Fifth Generation Languages)

ஐந்தாம் தலைமுறை மொழி ஒன்று உண்மையில் இருக்கிறதா என்பது மர்மமான ஒன்றாகும். சில கணினிசார்ந்த நிபுணர்கள் இந்த ஐந்தாம் தலைமுறை மொழியை உண்டெனக் கூறக்கூடும்; சிலர் மறுக்கவும் கூடும். இன்றுள்ள கணினிமொழிகளை விடவும் மிகவும் வளர்ச்சியடைந்த மொழி ஒன்று உருவாக்கப்பட்டு வெளியிடப்படுமானால் அதனை ஐந்தாம் தலைமுறை மொழி எனலாம். அடிப்படையில் பார்த்தால் செயற்கை நுண்ணறிவு கொண்ட ஓர் கணினிக்கு வழங்கவேண்டிய கட்டளைகளைக் கொண்ட மொழி ஐந்தாம் தலைமுறைமொழி என அழைக்கப்படலாம் என கணினி அறிஞர்கள் கூறுகின்றனர்

சி.சிவபாலன்

---

# கூட்டணியின் பலம், பலவீனத்தை அறிய தென்மாகாண சபையைக் கலைக்க முடிவு!

## சு.க.- ஜே.வி.பி. இடையே இணக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி.யும் கூட்டணி அமைக்கும் நோக்கில் அதன் பலத்தைப் பரீட்சிக்கும் வகையில் தென்மாகாணசபையை உரிய காலத்துக்கு முன்பே கலைத்துவிட்டுத் தேர்தல் நடத்துவதென்ற தீர்மானத்திற்கு வந்துள்ளதாக கூட்டணி தொடர்பான பேச்சுக்களில் தெரியவருகிறது.

அரசாங்கத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்கும்போது பாதகமான விளைவுகள் ஏற்படின் அது தொடர்பாக பேச்சுநடத்தியுள்ள அரப்பிரதிநிதிகள் அதிகாரப்பகிர்வினால் ஆட்சிய மைக்க முடியாது என தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் பொ.ஐ.மு.க்குக் கீழ் உள்ள மாகாணசபை அனைத்தும் உரிய காலத்துக்கு முன் கலைக்க சனாதிபதி விருப்பமில்லாததும் தென்மாகாண சபை ஒன்றில் மட்டுமே கூட்டணி வெற்றிபெற முடியும் என்று கருதுவதாலும் மேற்படித் தீர்மானத்திற்கு காரணம் கூறப்படுகிறது.

இதற்கிடையில் தென்மாகாண சபையை உரிய காலத்திற்கு முன் கலைத்துவிட அதன் அமைச்சர்களும் அதிகாரிகளும் அதிருப்தியை வெளிப்படுத்துவதால் இத்தீர்மானம் சாத்தியப்படாமல் விடலாம் எனவும் கூறப்படுகிறது.

# வீட்டுத்தோட்டச் செய்கைக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கல்மடுநகர், சம்புக்குளம் கிராம கிராமசேவகர் பிரிவுகளில் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கான ஊக்குவிப்பு நிதி வழங்கல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வடக்குக் கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் சம்புக்குளம் பகுதியில் வாழும் வறுமைக்கோட்டுக்குக் கீழ்பட்ட 20 வீட்டுத்தோட்டச் செய்கையாளர்களுக்கு தலா 2500 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. (லோ)

# தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த அவசியமான நடவடிக்கைகளை எடுக்குக

## - சனாதிபதிக்கு ஜே.வி.பி வேண்டுகை

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சனாதிபதிக்குமக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா அனுப்பியுள்ள கடிதத்தில் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கும் இங்கு வாழும் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தை விலக்கிக் கொள்ளல் புலிகளுக்கு கடல் பிராந்தியத்தை ஒதுக்கிக் கொடுத்தல் போன்ற அரசாங்கத்தின் நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதுடன் இந்து சமுத்திரத்தில் இருக்கும் இந்தியா உட்பட பல நாடுகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு–கிழக்கு ஆசிரியர் இடமாற்றம் உடனடியாக இடைநிறுத்தப் பணிப்பு!

(திருமலை)

வடக்குக் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான அதிபர் மற்றும் ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கொள்வதை உடனடியாக இடைநிறுத்துமாறு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்களுக்கான வருடாந்த இடமாற்றங்கள் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பாடசாலைகள் மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் பாதிப்புகள் ஏற்படுவது பற்றி மாகாணக்கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் மாகாணக்கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எனவே மறு அறிவித்தல் வரும் வரை சகல ஆசிரியர் இடமாற்றங்களையும் உடனடியாக இடைநிறுத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 2004ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றங்களை இடமாற்ற அறிவுறுத்தல்களுக்கு அமைவாகத் தயாரித்து ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் மாகாண கல்வியமைச்சிற்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

எதிர்பாராத விதமாக பாடசாலைகளில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக இடமாற்றங்களை மேற்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுமிடத்து பிரச்சினை தொடர்பான அறிக்கையொன்றினை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி இடமாற்றத்திற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## - மத்திய மாகாணத்தில் -

# உதவி மருத்துவர் போராட்டம் 4ஆவது நாளாக தொடர்கிறது!

மத்திய மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட உதவி மருத்துவர்கள் மேற்கொண்டு வருகின்ற வேலைநிறுத்தம் நேற்று நான்காவது நாளாக தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள 169 வைத்தியசாலைகளைச் சேர்ந்த 226 உதவி வைத்திய அதிகாரிகளே மேற்படி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய மாகாண சுகாதார அமைச்சின் முரண்பாடான செயலைக் கண்டித்தே இவ்வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சரை சந்திக்க மல்வத்த பீடாதிபதி மறுப்பு!

(கொழும்பு)

**இலங்கைக்கு நேற்று முன்தினம் மாலை விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி ராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா ரொக்காவை சந்திப்பதற்கு மல்வத்த பீடமகா நாயக்கர் ரம்புக்வல விபசிதேரர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.**

விபசிதேரரைச் சந்திப்பதற்கு அனுமதி கோருவதற்காக அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கடந்த வெள்ளிக்கிழமை சென்றபோதும் ரொக்கா இலங்கையில் நிற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரண்டு தினங்களிலும் தனக்கு இதனை விட முக்கியமான வேறு வேலைகள் உள்ளதாகவும் ரொக்காவைச் சந்திக்க நேரமில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இதற்கு அமெரிக்கத்தூதரக அதிகாரிகள் பலமுறை முயன்றும் முயற்சி பலனளிக்கவில்லை.

ரொக்கா தனது விஜயத்தில் அரச அதிகாரிகளையும் அரசசார் பற்ற நிறுவனங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்களையும் அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேசிவருகிறார்.

சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் முகமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் இவர் இங்கு வந்துள்ளார் என்பது தெரிந்ததே

## 1-வது பேருந்து சேவை

மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கரையாக்கன்தீவுக் கிராமத்திற்கு முதல் தடவையாக நியூ ஈஸ்டன் பஸ் கம்பனியின் மட்டக்களப்புசாலை பஸ் சேவையை நடாத்தவுள்ளது. இச்சேவை மட்டக்களப்பு பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து புதூர், வலையிறவு, குறிஞ்சாமுனை, கன்னன்குடா, மண்டபத்தடி ஊடாக கரையாக்கன்தீவைச் சென்றடையும்.

## மின்கம்பத்துடன் மோதி பயணிகள் பேருந்து விபத்து

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஊறணியில் கடந்த சனியன்று அதிகாலை 4.30 மணியளவில் பயணிகள் பேருந்து மின்சாரக்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதனால் குறித்த பேருந்து சேதமடைந்தது எனினும் பிரயாணிகள் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

கொழும்பிலிருந்து கல்முனை நோக்கிச்சென்று கொண்டிருந்த தனியாருக்குச்சொந்தமான பேருந்து வண்டியே ஊறணியிலுள்ள திருப்பெருந்துறை வீதிச்சந்திக்கு அருகில் விபத்துக்குள்ளானது.

-அரசாங்க காணிகள் தொடர்பாக-

## தேசியக் கொள்கை தயாரிக்க அரசாங்கம் தீர்மானம்

நாட்டிலுள்ள அரசாங்கக் காணிகள் தொடர்பாக தேசியக் கொள்கையொன்றைத் தயாரிப்பதென அரசு தீர்மானித்துள்ளதாக காணியமைச்சர் ராஜித சேனாரட்ண கூறியுள்ளார்.

காணிகள் தொடர்பாக தரவு வங்கியொன்றை நிறுவுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என அவர் மேலும் கூறியுள்ளார்.

எந்த அரசு பதவிக்கு வந்தாலும் காணிகளைப் பொறுத்த வரை இத்தேசிய கொள்கையின் பிரமாணங்களை அது கடைப்பிடிக்கும் என சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

## வட-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் ஜூன்-5இல் நடத்துவதற்கு ஏற்பாடு!

### – உதவித் தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு சகல ஒழுங்குகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மார்ச் மாதம் 25ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் செல்லுபடியாகும் என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தேர்தல்கள் அடுத்த மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அருந்தவச்செல்வம் தெரிவிக்கும் போது தபால் மூல வாக்களிப்பு ஏற்கனவே நடைபெற்றுள்ளது என்று குறிப்பிட்டார்.

## உபமின்சார சபை அலுவலகம் ஆயுதக் குழுவினரால் கொள்ளை

சிறிலங்கா மின்சார சபையின் ஏறாவூர் மத்திய நிலையத்திலிருந்து மின்னிணைப்பு உபகரணங்கள் ஆயுதக்குழு ஒன்றினால் கொள்ளையிடப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிறிபால உடுபக்க தெரிவித்தார். இச்சம்பவம் கடந்த 07ஆம் திகதி அன்று இடம்பெற்றது. இரவு வேளை வீதி மின்விளக்குகள் அணைக்கப்பட்ட பின்னர் பிக்கப் வாகனமொன்றில் வந்த ஆயுதக் குழுவினர் அலுவலகக் காவலாளியை அச்சுறுத்திவிட்டு கதவுகளை பலவந்தமாகத் திறந்து சுமார் இரண்டு லட்சம் பெறுமதியான வயர் மற்றும் இணைப்பு உபகரணங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர். இதுதொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## வீதியோரத்தில் உரையாடிய இருவர் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயம்!

### -மட்டு சொறிக்கல்முனையில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சொறிக்கல்முனைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீதியோரத்தில் இருவரும் உரையாடிக் கொண்டிருந்த போதே இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## மண்டைதீவுப் பகுதியில் மக்கள் மீது கடற்படையின் கெடுபிடி தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் மீனவர்கள் மீது சிறிலங்காக் கடற்படையினர் கடும் கெடுபிடிகளை மேற்கொண்டு வருவதாகக் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு தற்போதும் பாஸ் நடைமுறை தொடர்ந்தும் நடை முறையில் இருப்பதாகவும் தங்களது வீடுகளில் உறவினர்கள் யாராவது வந்து நிற்க வேண்டுமானால் முன் னறிவித்தல் கடற்படைக்குக் கொடுக்க வேண்டும் எனவும் தெரி விக்கப்படுகிறது.

இப்பகுதியில் இருந்த ஒரேயொரு வைத்தியசாலையும் 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது கடற்படையால் தரைமட்டம் ஆக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள மக்கள் கல்வி, சுகாதாரம் உட்பட அடிப்படைத் தேவைகள் எதனையும் பூர்த்தி செய்யாத அளவிற்கு கடற்படை மிகவும் நெருக்கடிக்குள் இந்த மக்களை வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மின்சார வசதியற்ற கிராம விபரம் திரட்டப்படுகின்றன

மட்டக்களப்பு மாவட்டத்தில் மின்சார வசதியற்ற கிராமங்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன. பிரதமரின் பணிப்புரைக்கேற்ப இவ் விபரங்களை கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிஸாஹிர் மௌலானா ஊடாகப் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.மாவட்டத்தில் படுவான்கரைப் பகுதியில் பெரும்பாலான கிராமங்களே மின்சார வசதியின்றி உள்ளன. அத்துடன் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் எந்தவொரு கிராமத்திற்கும் மின்சார வசதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சிசுவின் சடலம் மீட்பு

(கொழும்பு)

பதுளை ஓயா ஆற்றில் கற்பாறைகளுக்கிடையே சிக்குண்டு கிடந்த பெண் குழந்தை ஒன்றின் சடலத்தை பதுளை பொலிசார் மீட்டுள்ளனர்.

ஆற்றில் குளிக்க வந்த இளைஞர்களே மேற்படி சடலத்தைக் கண்டு பொலிசாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

இது குறித்த விசாரணையை பதுளை நீதிபதி மேற்கொண்டுள்ளார். அத்துடன் இக்குழந்தையின் தாயை கண்டு பிடித்து கைது செய்யும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

## விசுவமடு சந்திப் பகுதியில் குவிந்திருக்கும் குப்பை

(அலுவலக செய்தியாளர்)

விசுவமடு சந்திப் பகுதியில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவது அதிகரித்துள்ளது.

விசுவமடு சந்தியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களிலிருந்து கிடைக்கின்ற கழிவுகளே அதிகளவில் சந்தியின் பல பகுதிகளிலும் கொட்டப்பட்டுள்ளன.

அவ்வாறு கொட்டப்பட்ட கழிவுகள் அப்படியே குவியல்களாகக் காணப்படுகிறன. அத்துடன் மேற்படி பகுதியில் எங்கு பார்த்தாலும் பொலித்தின் பைகள்பறந்து காணப்படுவதையும் காணமுடிகிறது.

(லோ)

## வருமான அதிகரிப்புத் திட்டத்தில் 124 பேர் பயன் பெறுகை

(அலுவலக செய்தியாளர்)

முல்லை உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் போசாக்குக் குறைந்த சிறுவர்களுக்கான வருமான அதிகரிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 124பேர் பயனாளிகளாகி முன்னேற்றமடைந்து வருகின்றனர். 124 பயனாளிகளில் 71பயனாளிகளுக்கு 02 மறியாடுவீதம் வழங்கப்பட்டுள்ளன. 53 பயனாளிகளுக்கு 01பால் மாடு வீதம் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் 22 பயனாளிகளுக்கு 13 கோழிகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. கோழிகளுக்கு அம்மை.ரனிக்கட் போன்ற மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. நாளாந்தம் கள அலுவலர் மூலம் களத் தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மிகுதி பயனாளிகளுக்கு கோழி வழங்குவதற்கு ஒழுங்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சிறுவர் சேமிப்பு மகளிர் சேமிப்பாக ரூபா6680/= ச.பெ. அலவைப்புச் செய்யப்படுகின்றது. (லோ)


## காற்றினூடே... வாழ்த்தினை...



**லெப்.கேணல் துணிகைச்செல்வி/கவிதா**

**[சுப்பிரமணியம் சத்தியதேவி]**

*உரிய தருணத்தில் – நீ*
*உதித்த நாள் இன்று...*
*உன் வாழ்த்தினை...*
*உன் செவிதனில்...*
*உரைத்திட – என்*
*உள்ளத்திற்கு இயலாது*
*உன் தியாகம்*
*உன் நினைவுகள்*
*உன்னுடன் வென்றுவிட்டது.*
*உக்கிரமாய்*
*உடன் தர்க்கமிடா – அன்பளிப்பு*
*உள்ளார் உதிரும் கண்ணீர் பூக்கள்*
*இயற்கை தந்த ஒளிச்சுடர்களைத்தான்*
*ஒளிரவிட முடியும். ஆனால்*
*உரிய உன்னத தாயகத்தின்*
*வெற்றிக் களிப்புச் செய்திகளை*
*போர்க்களம் வென்றவர்*
*உன் காதினில்...*
*உரைப்பதுபோல் ஆகுமா?*
*உனக்கு உரைத்திடும். வாழ்த்தினை*
*உள்ளத்தினில்...*
*சுமந்து...*
*அமைதியாய்*
*உலாவரும் காற்றினூடே...*
*வாழ்த்தினை*
*உன் செவிகளில்... பரவவிடுகிறேன்.*

என்றும்! உம் நினைவுகளை உள்ளத்தில் தாங்கி

**தங்கை தீபனா, போராளிகள், நண்பர்கள்.**

(3252)

### சிந்தனைக்கு

சுதந்திரம் தான் மனித வாழ்விற்கு அர்த்தத்தைக் கொர்டுக்கின்றது; முழுமையைக் கொடுக்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 13-05-2003

## தீர்வு ஏற்பட அனுமதிப்பார்களா?

"இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியானது டோக்கியோவில் இடம்பெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை மிக மோசமாகப் பாதிப்படையச் செய்யும்" என்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றுக்கள் அவரது அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள அரசியல் நெருக்கடியை வெளிப்படுத்தப் போதுமானதாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அபிவிருத்தி லொத்தர் சபையைத் திடீரெனச் சுவீகரித்ததன் மூலம் எழுந்த அரசியல் நெருக்கடியானது ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் ஸ்திர நிலையைப் பெரும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. சனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையிலான அதிகாரப்பகிர்வில் சிறிலங்காவின் அரசியல் யாப்பு மிகவும் சிக்கல் நிறைந்ததாகவே உள்ளது. ஆயினும் பிரச்சினைகளுக்கு அரசியல் யாப்பின் மூலம் தீர்வு காண முடியும். ஆயினும், அதற்குள் இவர்களின் அதிகாரப் போட்டியானது நாட்டைச் சீர்குலைவிற்கு உள்ளாக்கிவிடும்.

டோக்கியோவில் நடைபெறும் உதவிவழங்கும் மாநாட்டிற்கு முன்னதாக ஐ.தே. முன்னணி அரசாங்கத்தினை நிலைகுலையச் செய்து விடுதல் என்பது சந்திரிகாவின் குறிக்கோளாகவே இருந்து வந்தது. அதாவது டோக்கியோ மாநாட்டை அவர் ஒரு கால எல்லையாகக் கொண்டிருந்தார் என்றே கூறலாம். இதனை மையமாகக் கொண்டு அவர்களின் அரசியல் நடவடிக்கைகளும் முனைப்புப்படுத்தப்பட்டிருந்தது.

இதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசாங்கமும் உணர்ந்திருந்தது என்றே கூறுதல் முடியும். இதன் காரணமாகவே அரசாங்கத் தரப்பால் டோக்கியோ மாநாட்டிற்குப் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அமைச்சர் பீரிஸ், மிலிந்த மொறகொட போன்றோர் இதில் முழுக்கவனமும் செலுத்தி வந்தனர் என்றே கூறலாம்.

விடுதலைப்புலிகளுக்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெறவிருந்த ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தையையும், டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதையும் புலிகள் இடைநிறுத்திய போதும் டோக்கியோ மாநாடு நடைபெறும் என்றே கூறப்பட்டது. புலிகள் கலந்து கொள்ளாததினால் கிடைக்கப்பெறும் நிதியுதவியின் அளவில் சிறு வெட்டு ஏற்படலாம் என்றே கருதப்பட்டது.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கையானது, ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் ஸ்திர நிலை குறித்து கேள்வியை எழுப்பியுள்ளதோடு, அரசாங்கத்திற்குப் பல நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதாகவும் ஆகியுள்ளது. இந்நிலையானது தனது அரசாங்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள ரணில் விக்கிரமசிங்க பல வகைகளில் தீவிரமுயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தைத் தோற்றுவித்துள்ளதெனலாம்.

இத்தனைக்கும் டோக்கியோ மாநாட்டினால் சிறிலங்காவிற்குப் பெரும் நன்மை கிட்டலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது இதுவரை இல்லாத அளவில் பெரும் தொகை கடனுதவி கிடைக்கப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. அதிலும் குறிப்பாக இம்மாநாட்டை முன்னின்று நடத்தும் ஜப்பானே சிறிலங்காவிற்கு அதிக நிதி அளிக்கும் நாடாக இருப்பதினால் ஜப்பானில் இருந்து பெருமளவு நிதி கிட்டும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறானதொரு சூழ்நிலையிலும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை நிலைகுலையச் செய்து, உதவி வழங்குவோருக்கு ரணில் அரசாங்கத்தின் ஸ்திரநிலை குறித்து அவநம்பிக்கையை ஏற்படுத்துவதன் மூலம் உதவி வழங்கலில் பெரும் குறைப்பைச் செய்வதே சனாதிபதி சந்திரிகாவின் நோக்கமாகும். இதன் மூலம் ரணில் அரசாங்கத்தைப் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கவைத்து அரசியல் ரீதியில் பலவீனப்படுத்திவிடுதலே திட்டமாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதும், அவரது அமைச்சரவைச் சகாக்கள் மீதும், உதவி வழங்கும் நாடுகளுக்கும், நிறுவனங்களுக்கும் நல்லபிப்பிராயம் இருக்கலாம். ஆயினும். பெரும் தொகை முதலீட்டையும், உதவிகளையும் நாட்டில் ஸ்திரநிலை இல்லாத வேளையில் அவர்கள் வழங்க முன்வருவார்களா என்பது கேள்விக்குரியதே ஆகும்.

இந்தவகையில் அதிகாரப் போட்டியின் காரணமாகத் தமது நாட்டிற்குக் கிடைக்கக் கூடிய பொருளாதார உதவிகளையே கெடுத்து விட முனையும் சனாதிபதி சந்திரிகா போன்றவர்கள், தாம் தீவிரமாக எதிர்க்கும் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வொன்றை நிறைவேற்றவோ அன்றி அமுல் செய்யவோ அனுமதிப்பார்கள் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அதிலும் பேரினவாதத்தின் முழு ஆசியுள்ள விடயத்தில் இவர்கள் எவ்வாறு மௌனமாக இருப்பார்கள் என எதிர்பார்க்க முடியும்.

# சமாதானத்திற்கு எதிரான சக்திகள் வலுப்பெற சனாதிபதி வழியமைக்கிறார்

## அமைச்சர் திஸாநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையைப் பொறுப்பேற்பது என்று சனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கை அவரின் பிடிவாதமான போக்கையே வெளிக்காட்டுகின்றது என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

டோக்கியோவில் யூன் மாதத்தில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு அரசாங்கம் ஏற்பாடுகள் செய்து வரும் இந்த வேளையில் சமாதான முயற்சிக்கு எதிரான சக்திகளை வலுவடையச் செய்யும் விதத்தில் சனாதிபதியின் நடவடிக்கை அமைந்துள்ளது.

அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கொழும்பில் இது தொடர்பாக நேற்று முன்தினம் உரையாற்றும் போது, அபிவிருத்தி லொத்தர் சபை எந்தவொரு சமயத்திலும் சனாதிபதியின் கீழ் செயற்படவில்லை என்றும் பல்வேறு அமைச்சுக்களின் கீழேயே அது செயற்பட்டு வந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தாம் விரும்பியபடி அரச நிறுவனங்களை சனாதிபதி பொறுப்பேற்பதற்கு அரசாங்கம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டாது. இந்தப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண ஐக்கிய தேசிய முன்னணி அரசு தயாராகவுள்ளது என்று கூறிய திஸாநாயக்க இந்த விடயம் குறித்து சனாதிபதி பிரதமருடன் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, சனாதிபதியின் இத்தீர்மானம் புரிந்துணர்வு அடிப்படையிலான ஆளுமைக்கு பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்று அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

சனாதிபதிக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில், அபிவிருத்தி லொத்தர் சபைக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் என்ற ரீதியில் தமக்குத் தெரிவிக்காமலே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்து அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

# அவசர பாதுகாப்பு நடவடிக்கைக்கென 400 பொலிசார் கொழும்பிற்கு அழைப்பு!

(கொழும்பு)

அவசர பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வெளிமாவட்டங்களிலிருந்து 400 பொலிசார் கொழும்பிற்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முதல் 03 வாரங்கள் விசேட கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது.

அம்பாறை, வவுனியா,கேகாலை ஆகிய பொலிஸ் பிரிவுகளிலிருந்து அழைத்து வரப்பட்டுள்ள இப்பொலிஸார் கறுவாக்காடு, புறக்கோட்டை, தெமட்டகொட ஆகிய பொலிஸ் நிலையங்கள் ஊடாகவே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

-யுத்த நிறுத்த காலத்தில்-

# 8000 படையினர் ஓட்டம்; 500 பேர் மட்டுமே இணைவு!

யுத்த நிறுத்த காலத்தில் எண்ணாயிரம் படையினர் தப்பியோடியுள்ளனர். 500 பேர் மட்டுமே புதிதாகச் சேர்ந்துள்ளனர்.

யுத்தநிறுத்தம் அமுலாகிய பின்னர் கடந்த ஆண்டு மட்டும் எண்ணாயிரம் படையினர் தப்பியோடி விட்டதாக பாதுகாப்பு அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படையினர் தப்பியோடுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வடக்கு கிழக்கில் பணிபுரியும் படையினருக்குப் போதிய வசதிகள் இன்மையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

-4 ஆவது டெஸ்ட் கிரிக்கெட்-

# மேற்கிந்தியத் தீவு வெற்றிபெற 418 ஓட்ட வெற்றி இலக்கு

அவுஸ்திரேலிய மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையில் அன்டிகோவாவில்நடைபெற்று வருகின்ற நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவின் போது மேற்கிந்தியத் தீவுகள் அணி அதன் இரண்டாவது இனிங்சிற்காக விக்கெட் இழப்பின்றி 47 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஹைறல் மற்றும் சிமித் ஆகியோர் முறையே 19 ஓட்டங்களையும் 21 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காது பெற்றனர்.

இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற வேண்டுமாயின் மேலும் 376 ஓட்டங்களைப் பெற வேண்டும். எனினும் இந்த ஓட்ட எண்ணிக்கையை மேற்கிந்தியத் தீவுகள் அணியால் பெறுவது கடினம எனத் தெரிவிக்கப்படுகிறது.

உலக டெஸ்ட் சம்பியன்களான அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் தனது இரண்டாவது இனிங்சிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 417 ஓட்டங்களைப் பெற்றது. முதல் இனிங்சில் குறைந்த ஓட்டங்களைப் பெற்றிருந்த போதிலும் இரண்டாவது இனிங்சில் ஹெய்டன், லாங்கர் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டம் காரணமாக அவுஸ்திரேலிய அணி 417 ஓட்டங்களைப் பெற்றது.

இவர்கள் இருவரும் முதலாவது விக்கெட்டுக்காக 242 ஓட்டங்களை இருவருக்கும் இடையில் பகிர்ந்தனர். இதில் ஹெய்டன் 177 ஓட்டங்களையும் லாங்கர் 111 ஓட்டங்களையும் பெற்றனர்.

மேற்கிந்திய அணிசார்பில் மேர்வின் டிலான் 112 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.


3:0 என்ற நிலையில் முன்னணியில்திகழும் அவுஸ்திரேலிய அணி இப்போட்டியிலும் வெற்றிபெறும் வாய்ப்புக்களே அதிகம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சர்.டேன்னிஸ் பட்டத்தை கேனின் வேன்றார்

ஜேர்மனியில் நடைபெற்ற சர்வதேச ஓப்பன் டென்னிஸ் போட்டியில் மகளிருக்கான சாம்பியன் பட்டத்தைப் பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்வின் கெனின் கைப்பற்றியுள்ளார்.

இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் பெல்ஜியம் வீராங்கனைகளான ஹிம்ஸ் லிஸ்ஸசும், ஜஸ்வின் கெனினும் மோதினார்கள்.

கடும் போட்டி நிலவிய இந்த ஆட்டத்தின் முடிவில் 6:4, 4:6, 7:5 எனும் செட்களில் ஜஸ்வின் கெனின் வெற்றிபெற்று ஹிம்ஸ் லிஸ்ஸசுக்கு அதிர்ச்சி அளித்தார்.




முக்கோண ஒருநாள் போட்டி

# ஜெயசூரியா பங்கேற்பது சந்தேகம்

சிறிலங்கா கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும் முன்னாள் தலைவருமான சனத் ஜெயசூரியா சுகயீனமுற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவருக்குத் தொண்டையில் தசைவளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக அவர் பயிற்சியில் ஈடுபடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று மாதங்களில் இவருக்கு நான்காவது தடவையாக இந்த நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும் இன்று நடைபெறவுள்ள நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் அவர் விளையாடுவார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை சீரின்மையால் கொழும்பில் நடைபெறவிருந்த இரண்டாவது சுற்றுப்போட்டிகள் தம்புள்ளையிலேயே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் கொழும்பில் பெய்துவரும் தொடர் மழை மேலும் பல நாட்களுக்குத் தொடரலாம் என்ற அறிகுறி தென்படுவதே இதற்குக் காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



"அல்பலா" கிண்ணத்திற்காக தம்புள்ள மைதானத்தில் நடைபெற்ற முக்கோண ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சிறிலங்கா அணியை வென்ற பாகிஸ்தான் அணி வெற்றிக் களிப்பில்

# ஜப்பான் உதவி வழங்கும் மாநாட்டை குழப்புவதே சனாதிபதியின் நோக்கம்

## அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்ண

(கொழும்பு)

ஜப்பானில் யூன் மாதம் நடைபெற இருக்கின்ற உதவி வழங்கும் மாநாட்டின் ஊடாக ஒரு வருடத்துக்கு ஆயிரம் மில்லியன் நிதியுதவி கிடைக்க இருக்கின்றது. இதனை குழப்பும் நோக்கத்திலேயே சனாதிபதி இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என நீர் முகாமைத்துவ அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கமும், பாராளுமன்றமும் அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி பொறுப்பேற்றுள்ளதை எதிர்க்கின்றன.

அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறி14 மாதங்கள் பூர்த்தியடையாத நிலையில் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தைக் கலைக்க சனாதிபதிக்கு அதிகாரம் இருந்தாலும் பண்பியல் ரீதியாக தகுதி இல்லை. பாராளுமன்றத்தை கலைப்பதில்லை என்று சனாதிபதி கடிதம் மூலம் அறிவித்துள்ள போதிலும் அரசாங்கத்தை குழப்பும் நோக்கில் கலைத்தால் தேர்தல் ஒன்றை எதிர்நோக்கவும் தயார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கோலையாளி கைது

போதை தலைக்கேறியதால் பெற்ற குழந்தையைத்தரையில் அடித்துக் கொன்று விட்டு ஒருமாத காலமாகத் தலைமறைவாகியிருந்த தந்தையை இரத்தினபுரிப்பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இரத்தினபுரிப் பொலிசாரால் பலாங்கொட பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின் பலாங்கொட நீதிமன்றத்தில்ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து அவரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பலாங்கொட நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## -கட்டாக்காலி நாய்கள் துரத்தின-

# துவிச்சக்கர வண்டிகள் மோதியதில் கிளிநொச்சியில் ஒருவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரப்பகுதியில்ஏ-9 வீதியில் நேற்றிரவு நடைபெற்ற வீதிவிபத்தொன்றில் ஒருவர் காயமடைந்தார்.

இரவு 10மணியளவில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தவரை நாய் கலைத்ததில் பக்கம் மாறி வேகமாகச்சென்ற வேளை எதிரே வந்துகொண்டிருந்த துவிச்சக்கர வண்டியுடன் மோதினார் இதனால் மற்றையதுவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த கரடிப்போக்கைச் சேர்ந்த முத்தையா விஜிகுமார் (வயது -16) என்பவர் பலத்த காய மடைந்த நிலையில் பொன்னம்பலம் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

அண்மை நாட்களாக கிளிநொச்சிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளமையால் மக்கள் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (லோ)

# உதைபந்தாட்டப் போட்டியில் திருமலை அணி வெற்றி பெற்றது

வட- கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியின் கபடி மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்று மாலை நிறைவுபெற்றுள்ளன.

கடந்த மூன்று நாட்களாக கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டிகளின் இறுதி நாள் போட்டியை நேற்று மாலை 4.00 மணிக்கு தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

இறுதிப் போட்டிக்குத் தெரிவாகிய திருகோணமலை - மன்னார்



அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் ஆட்டமுடிவில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் போட்டு சமநிலையில் இருந்தன. இதனையடுத்து ஐந்து சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன. இச் சமநிலை உடைப்பில் மன்னார் அணி இரண்டு கோல்களைப் போட்டது. திருமலை அணி ஐந்து கோல்களையும் போட்டு வெற்றி பெற்றது.

இப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயங்களும் வழங்கப்பட்டன.இதனை கிளி. அரச அதிபர் திரு.இராசநாயகம் அவர்கள் வழங்கினார்.அத்துடன் விளையாட்டுத்துறையில் 25 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றியவர்களுக்கு விளையாட்டு அமைச்சால் பதக்கங்கள் வழங்கப்பட்டன. அதில் கிளி. மாவட்டத்தைச் சேர்ந்த எல்.கனகராஜா அவர்களுக்கான பதக்கத்தை அரச அதிபர் வழங்கினார். இப்போட்டியின் நிறைவு நிகழ்வில் ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர். (லோ)

# மேலுமொரு பேருந்துச்சேவை நடத்த பயணிகள் கோரல்

பருத்தித்துறையில் இருந்து தாளையடி ஊடாக கிளிநொச்சி வரும் பேருந்தில் பயணிகள் அளவுக்கு அதிகமாக ஏற்றப்படுவதனால் வயோதிபர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள், கைக் குழந்தையுடன் செல்லும் தாய்மார்கள். நோயாளர்கள் ஆகியோர் பெரும் அவதிப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்தப் பேருந்தில் உள்ள ஆசனங்களின் அளவைப் போல் இரு மடங்களவில் கூட தினமும் பயணிகள் ஏற்றப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்தச் சேவையில் ஒரு பேருந்து மட்டும் பருத்தித்துறையிலிருந்து காலை 7.15 மணிக்குப் புறப்பட்டு தாளையடி ஊடாக கிளிநொச்சி சென்று மாலை 2.00 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு தாளையடி ஊடாக மாலை ஆறு மணிக்கு பருத்தித்துறையை அடைகின்றது. எனவே இந்தப் பாதையினூடாக மேலதிகமாக மருதங்கேணி வரை யாவது ஒரு பேருந்தினை சேவையில் ஈடுபடுத்த சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுப்பார்களா என்று தினமும் இப்பாதைவழியே இந்தப் பேருந்தில் பயணம் செய்யும் பயணிகள் கோருகின்றனர். (11)

# கழிவுப் பொருட்களின் துர்நாற்றத்தால் வீதியால் செல்ல முடியாத நிலை

## குடியிருப்புகளுக்கும் பாதிப்பு



(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி 156 ஆம் கட்டைப் பகுதியில் குடிமனைகளின் அண்மையில் ஏராளமான கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டுள்ளமையால் துர்நாற்றம் வீசுகிறது. இவ்விடத்தில் கிளிநொச்சி நகரப்பகுதியில் உள்ள உணவகங்களின் கழிவுகள், தகரங்கள் உட்பட ஏராளமான கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டு வீதியால் செல்ல முடியாதவாறு மணம் வீசுகிறது.

இக்கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டுள்ள இடங்களில் இருந்து சுமார் 25 மீற்றர் தூரத்தில் இருமருங்கிலும் குடிமனைகள் அமைந்துள்ளன. இக்கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டுள்ள இடத்தில் இருந்து 30 மீற்றர் தொலைவில் ஒரு சித்த ஆயுள் வைத்திய நிலையம் அமைந்துள்ளது. அவ் வைத்தியசாலையின் வைத்தியர் இது குறித்துக் கூறுகையில்;

இப்பகுதியில் சந்தைக் கழிவுகள் மற்றும் உணவகக் கழிவுகள் உட்பட ஏராளமானவை கொட்டப்பட்டுள்ளன. முதலில் லான்மாஸ்ரர் மூலமும் பின்னர் உழவு இயந்திரத் திலும் கழிவுகளைக் கொண்டுவந்து கொட்டினார்கள்.நாங்கள் பலமுறை கூறியும் அதனை அவர்கள் கேட்கவில்லை. அவர்கள் சுகாதார மேற்பார்வையாளரிடம் கதைக்குமாறு கூறினார்கள். அவரிடம் சென்று கதைத்த போது அவர் காணி எங்களுடையது என்பதை உறுதிப்படுத்தித் தருமாறு கூறினார். எம்மிடம் எதுவித ஆவணமும் இல்லை. நான் ஒரு வைத்தியர். இங்கு பலர் வருகிறார்கள். அவர்களுக்கு மருத்துவம் செய்யமுடியாதுள்ளது. எம்மால் சாப்பிடக்கூட முடியவில்லை. இலையான்கள் தொல்லை தாங்கவே முடியாதுள்ளது. தற்போது பெய்கின்ற மழை காரணமாக இக்கழிவுகள் அதிக துர்நாற்றம் வீசுகிறது.

எனது குடிநீர் கிணற்றின் அருகிலேயே இக்கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன. இதனால் எனது கிணற்றில் என்னால் தண்ணீர் கூடக் குடிக்க முடியவில்லை. தூரச் சென்று வேறு கிணற்றிலேயே தண்ணீர் அள்ளவேண்டிய நிலையுள்ளது எனத் தெரிவித்தார். (லோ)

# கிளி.பூநகரிப் பிரதேசத்தில் ஆபத்தான பார்த்தீனியச் செடி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்தில் பார்த்தீனியம் என்னும் நச்சுத் தாவரங்கள் உள்ளமை இனம்காணப்பட்டுள்ளது என வடபிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையப் பொறுப்பதிகாரி கார்த்திகேசு சிறீரஞ்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் வவுனியா, யாழ்ப்பாணப் பகுதிகளில் அதிகளவாக இனங்காணப்பட்ட இத்தாவரங்கள் தற்போது கிளிநொச்சி மாவட்டத்திலும் பரவுவது மிகவும் ஆபத்தானதாகும். பார்த்தீனிய நச்சுத்தாவரம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் இடத்தில் உள்ள பசளைத்தன்மைகளை உறிஞ்சி நிலத்தை நச்சுத்தன்மையாக்கும் அபாயம் நிறைந்த தாவரமாகும்.

நெல்போன்ற பயிர்களுடன் இவையும் சேர்ந்து வளர்வதால் நெல்லினங்கள் மகரந்தச் சேர்க்கையில் ஈடுபடும்போது இவற்றின் விதைகளும் சேர்ந்து கொள்வதால் நெல் மணிகள் சப்பியடைகின்றன. அத்துடன் அந்த நச்சுத்தாவரம் விரைவில் பரவுவதுடன் நீண்ட ஆயுள்கொண்டவையாகவும் உள்ளன. இதன் விதைகள் காற்றில் பரவி சுவாசத்துடன் உட்செல்வதால் முட்டு, இழுப்பு, தொய்வு போன்ற நோய்களையும் ஏற்படுத்துகின்றது.

அத்துடன் இத்தாவரங்களை விலங்குள் உட்கொள்வதால் நோய்த்தாக்கங்களும் ஏற்படுகின்றது.இதனால் இத்தாவரம் விவசாயிகளின் காணிகளில் காணப்பட்டால் அது தொடர்பாக உரியவர்களுடன் தொடர்புகொண்டு அதனைக் கட்டுப்படுத்த வேண்டும்.

அவ்வாறு தவறும்பட்சத்தில்பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (லோ)

### 200குடும்பங்கள் முகாம்களில்

திருகோணமலை மூதூரில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளினால் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

மூதூர் கிழக்கில் உள்ள சேனையூர் மத்திய கல்லூரியில் 200 குடும்பங்களும் பட்டித்திடல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை யில் 80 குடும்பங்களும் இடம் பெயர்ந்தும் தற்போதும் அகதி களாக வாழ்ந்து வருகின்றனர்.

தமது கிராமங்களில் முழுமையானஇயல்புநிலை தோன் றும் வரை தாம் அங்கு செல்லப்போவதில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### தமிழர் புனர்...

களில் பலியான கடற்கரைச் சேனையைச் சேர்ந்த ரவிசங்கர், ரமணன், கமலநாதன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு உதவித் தொகையும் அன்றையதினம் வழங்கப்பட்டது.

### யாழ்.மாதகல்...

கேதாகரன் ஆகியோரே தாக்கப்பட்டவர்களாவர்.

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### சனாதிபதிக்கு...

ணி.அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.இதேவேளை சிறிலங்கா சனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை சமர்ப்பிக்க தற்பொழுது பிரதமர் விரும்பவில்லை என்று நீதியமைச்சர் லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

சனாதிபதி மீது நம்பிக்கை இருப்பதாகவும் அவருடன்இணைந்து செயற்படவே பிரதமர் விரும்புவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

எனினும் சனாதிபதியின் செயற்பாடுகள் தொடர்ந்து சனநாயகத்துக்குவிரோதமாகஇருந்தால் இறுதி ஆயுதமாக குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### சந்திரிகா..

தாக சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். சனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற கலந்துரையாடலின்போது சனாதிபதியின் ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கதிர்காமரும் பிரசன்னமாக இருந்தார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், நேற்று மாலை இவர் சந்தித்துப் பேசினார்.

நேற்றுக் காலை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவைச் சந்தித்தார்.

அரசியல் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக நாளை தனது கருததுக்களை வெளியிட இருப்பதாக கிறிஸ்ரினா றொக்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வார்கள் என்று தான் நம்புவதாக அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவை நேற்றுக் காலை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது சார்க்மாநாட்டைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்

சிறிலங்காவிற்கான அமெரிக்க தூதுவர் அஸ்லி வில்சும் இந்தச் சந்திப்பின் போது உடனிருந்தார்.

### சனாதிபதியின்...

அடிப்படையில் எடுக்கப்பட்டது.

இதனை எதிர்ப்பவர்கள் தேவையானால் நீதி மன்றத்துக்கும் செல்லலாம்.

அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்பதற்கு சனாதிபதி எடுத்த தீர்மானம் சரியானது இதற்கு அரசியல் ஆசனத்தில் சனாதிபதிக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பது தொடர்பாக தீர்மானத்தையும் சனாதிபதிதான் எடுக்க வேண்டும். அவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டால் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கும் பொதுசன ஐக்கிய முன்னணி தயாராக இருக்கிறது.

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கும் சனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. தகுந்த நேரத்தில் அவர் அதனைச் செய்வார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.